## அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113.
## 2024–2025–ம் கல்வியாண்டு ஆண்டறிக்கை

– – –

- **கல்லூரியின் வரலாறு**

அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் ( பி 2 ) துறை, நாள் 6.1.2016–ன்படி,2016–2017–ம் கல்வியாண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், கெலமங்கலத்தில் அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி தமிழக அரசால் 2016–2017–ம் கல்வியாண்டில் துவங்கப்பட்டது. இப்பயிலகம் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், கெலமங்கலம் அருகில் கெலமங்கலத்திலிருந்து உத்தனப்பள்ளி செல்லும் சாலையில் 3–வது கிலோ மீட்டரில் 7 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது.

- **போதிக்கப்படும் பாடப்பிரிவுகள்**

இக்கல்லூரியில், அமைப்பியல், இயந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல், கணிப்பொறியியல் மற்றும் அரசாணை (நிலை) எண்.160, உயர்கல்வித் (பி–1)துறை, நாள் 10.05.2023–ன்படி, படிக்கும் காலத்தில் வருமானம் ஈட்டும் புதிய பாடப்பிரிவு **Digital Manufacturing Technologies** ஆகிய ஆறு பாடப்பிரிவுகளில் மூன்றாண்டு பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தலா 60 மாணவர்கள் வீதம் 360 மாணவ / மாணவிகள் சேர்ந்து பயில அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் சேர்க்கையில் நேரடி இரண்டாமாண்டில் சேர்ந்து கல்வி பயில கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் 10% சேர்க்க அனுமதி (DMT பாடப்பிரிவு நீங்கலாக) வழங்கப்பட்டுள்ளது.

- **கல்லூரியில் உள்ள வசதிகள்**

2024–2025–ம் நிதியாண்டில் இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கல்வி நலனை மேம்படுத்துவதற்காக செய்முறை வகுப்புகளுக்கு தேவையான உபகரணங்கள் / அறைகலன்கள் / கணினிகள் மற்றும் நூலக புத்தகங்கள் ரூ.95,82,177/–க்கு (ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து நூற்று எழுபத்து ஏழு மட்டும் ) கொள்முதல் செய்யப்பட்டு மாணவர்களின் செய்முறை பயிற்சிக்கு அப்பொருட்கள் சீரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கல்லூரியில் 100 மாணவர்கள் மற்றும் மாணவிகள் தங்கி படிக்கும் வகையில் விடுதி வசதியும், கல்லூரி வளாகத்திற்குள் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் சிற்றுண்டி வசதி, உடற்பயிற்சி கூடம் மற்றும் மிக பிரம்மாண்டமான கலையரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிலகத்தில் ஆடவர் விடுதி அரசாணை (நிலை) எண்.64, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிநு(2)த் துறை, நாள் 13.08.2024—ன்படி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி.கே.எம்.சரயு, இ.ஆ.ப., அவர்களால் 04.10.2024 அன்று இலவச ஆடவர் விடுதியாக தரம் உயர்த்தப்பட்டு, அரசு பிற்படுத்தப்பட்டோர் பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி திறக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்பயிலகத்திற்கு 38 ஆசிரியர் பணியிடங்களும், 21 ஆசிரியல்லாத தொழில் நுட்ப பணியிடங்களும், 20 அமைச்சுப்பணி பணியிடங்களும் மற்றும் 11 கடைநிலை ஊழியர் பணியிடங்களும் ஆக மொத்தம் 91 பணியிடங்கள் தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>முக்கிய நிகழ்வுகள்</u>

1. 15.08.2024 அன்று இந்திய 78—வது சுதந்திர தினவிழா மற்றும் 26.01.2025 அன்று இந்திய 75—வது குடியரசு தினவிழா மிகச்சிறப்பாக முதல்வர் தலைமையில் இப்பயிலகத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஆசிரியர்கள் / அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

2. பயிலகத்தின் ஆண்டு விழாவினை முன்னிட்டு, மாணவர்கள் / ஆசிரியர்கள் / பணியாளர்கள் பங்கு பெறும் வகையில் அனைத்து விதமான விளையாட்டு போட்டிகளும் சிறப்பாக இப்பயிலக உடற்கல்வி இயக்குநரால் நடத்தப்பட்டது.

3. சர்வதேச மகளிர் தினவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

4. இயந்திரவியல் துறை சார்பாக **Mechklm2K25 National Level Technical Symposium** நடத்தப்பட்டது.

5. நாட்டுநலப்பணித்திட்டம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மூலம் **Blood Donar Camp** 08.04.2025 அன்று நடத்தப்பட்டு, அதில் இப்பயிலகத்தில் பயிலும் / பணிபுரியும் மாணவர்கள் / ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் / அமைச்சு பணியாளர்கள் / தொழில் நுட்ப பணியாளர்கள் / அடிப்படை பணியாளர்களில் –25– பேர் இரத்த தானம் செய்தனர்.

6. போதை தடுப்பு குழுவின் மூலமாக போதை தடுப்பு விழிப்புணர்வு மற்றும் போதை பழக்கத்திலிருந்து விடுபடுதல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் குழந்தை திருமணம் தடுப்பு விழிப்புணர்வு கிருஷ்ணகிரி மாவட்ட சமூக நலத்துறை சார்பில் பேட்டி பச்சாவோ, பேட்டி பதாவோ (பெண் குழந்தைகளை காப்போம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்) என்ற தலைப்பில் 28.01.2025 அன்று விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

7. நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் தூய்மை பணியில் இளைஞர் பங்கு என்ற தலைப்பில் ஒருவாரக் கால சிறப்பு முகாம் போடிச்சிப்பள்ளி கிராமத்தில் நடைபெற்றது.

8. குடற்புழு நீக்க முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

9. காவல் உதவி ஆய்வாளர்கள் திரு.நீலமேகம் மற்றும் திரு.காமராஜ் ஆகியோரால் 02.01.2025 கல்லூரி மாணவிகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

10. பசுமை மன்றத்தின் சார்பாக பயிலக வளாகம் முழுவதும் செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடப்பட்டது.

11. புகைப்படம் மற்றும் காணொலி மன்றத்தின் சார்பாக பயிலகத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

12. தேன்கனிக்கோட்டை, வட்டாட்சியர் தலைமையில் 25.01.2025 அன்று வாக்காளர் தினத்தை முன்னிட்டு 'Nothing like voting, I vote for sure' என்ற பொருளின் கீழ் தேர்தல் விழிப்புணர்வு இப்பயிலக மாணவர் பேரணி மூலம் நடத்தப்பட்டது.

13. முதலாமாண்டு மாணவ /மாணவிகளுக்கு Yoga for Youth Empowerment program ஒசூர், மனவளக்கலை மன்றம் மூலம் நடத்தப்பட்டது.

**மாணவர் தேர்ச்சி விகிதங்கள்**

இக்கல்லூரியில் பயின்று வரும் மாணவர்கள் நல்ல தேர்ச்சி விகிதம் பெற்றுள்ளனர்.

**இவ்வாண்டு வெளிக்கல்லூரிகள் மற்றும் நமது கல்லூரியில் பரிசு பெற்ற மாணவர்கள்**

இப்பயிலகத்தில் பயிலும் –21– மாணவ / மாணவிகள் பல்வேறு வெளிக்கல்லூரிகளில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றனர். குடியாத்தம், ராஜகோபால் பாலிடெக்னிக் கல்லூரியில் 09.01.2025 அன்று நடைபெற்ற Zonal Level Kabaddi போட்டியில் இப்பயிலக மாணவிகள் முதலிடம் பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**இவ்வாண்டு சிறப்பு பயிற்சி மற்றும் மேற்படிப்பு பயின்ற ஆசிரியர்கள்**

இப்பயிலகத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற பயிற்சிகளில் கலந்து கொண்டனர். அப்பயிற்சியில் பெற்ற திறன்களை முழுமையாக மாணவ/மாணவிகளின் நலனுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**இக்கல்லூரியில் புதியதாக வரப்பெற்ற /சென்ற ஆசிரியர்கள் / அலுவலர்கள் / பணியாளர்கள்**

1. 2024–2025 பணியிட மாற்ற கலந்தாய்வு மூலம் இப்பயிலகத்திற்கு திருமதி.சி.சந்தியா, விரிவுரையாளர் / இயந்திரவியல் மற்றும் திரு.கே.பூர்ணசந்திரன், விரிவுரையாளர் / ஆங்கிலம் ஆகியோர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.
2. திரு.கு.சோமேஸ்வரன், பொருளாளராக பதவி உயர்வு பெற்றும், திருமதி.ச.ஆ.வந்தனா, கண்காணிப்பாளர் பணியிட மாற்றம் பெற்றும், திரு.து.கோபாலகிருஷ்ணன், உதவியாளராக பதவி உயர்வு பெற்றும், திரு.வெ.கார்த்திபிரசாந்த், இளநிலை உதவியாளராக புதியதாக பணி நியமனம் செய்யப்பட்டும் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.
3. திரு.க.குருசாமி, விரிவுரையாளர் / அமைப்பியல் அரசாணை (2டி) எண்.01, உயர்கல்வித் (ஐ2) துறை, நாள் 11.01.2025–ன்படி, பதவி விலகல் பெற்றார். திரு.மு.பிரகாஷ், விரிவுரையாளர் / இயந்திரவியல் 2024–2025 பணியிட மாற்றம் கலந்தாய்வு மூலம், அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, எட்டையபுரத்துக்கும், திரு.சு.சுரேஷ், விரிவுரையாளர் / ஆங்கிலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரி உதகமண்டலத்திற்கும் பணியிடமாற்றத்தில் சென்றனர்.

17

4. திரு.கு.சோமேஸ்வரன், பொருளாளர் 31.12.2024 பி.ப அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார்.

**வேலைவாய்ப்பு மைய மூலம் வேலை வாய்ப்பு ஏற்படுத்தியது**

பெங்களூர், ஒசூர் மற்றும் சூளகிரியில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் இப்பயிலகத்தில் மூன்றாமாண்டு பயிலும் மாணவ / மாணவிகள் –139– பேருக்கு 15.04.2025 அன்று நிலைத்தப்படி வேலை வாய்ப்பு இப்பயிலக முதல்வரின் வழிகாட்டுதலின்படி, வேலை வாய்ப்பு அலுவலர் திரு.பா.தாமோதரன், விரிவுரையாளர் / இயந்திரவியல் அவர்களால் வேலை வாய்ப்பு பெற்று வழங்கப்பட்டது என்பதை இப்பயிலக ஆண்டு விழாவில் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# ந ன் றி